# பாணி (PANI)

சுசீந்தரம் கிருஷ்ணன்

கலைஞர்களும் ரஸிகப் பெருமக்களும் அடிக்கடி இந்தப் "பாணி" என்ற சொல்லைக் கையாளுவதை நாம் பல சமயங்களில் கேட்கின்றோம்; மகிழ்கின்றோம்.

ஒரு பாட்டுக் கச்சேரியானாலும், அல்லது ஒரு நாட்டியக் கச்சேரி ஆனாலும் அல்லது திரைப்படத்தில் ஒரு நடிகனுடைய துடிப்புள்ள நடிப்பைக் காணும் போதும், அல்லது ஒரு ஓவியனுடையை கைவண்ணம் பட்டு மிளிர்கின்ற சித்திரத்தைப் பார்க்கும் வேளையும், இந்தப் பாணி என்ற சொல்லை அழுத்தமாகப் பயன்படுத்துகின்றோம். "ஒரு குறிப்பிட்ட" பாணி என்று புகழாரம் சூட்டுகின்றோம். புகழ்வதின் காரணம் அந்தப் பாணி நம் மனதிற்குத் திருப்தியும் உணர்விற்கு உல்லாசமும் ஊட்டுகின்ற தினால் தான்.

இந்தப் "பாணி" என்ற சொல்லின் மூல வேரை சற்று ஆராய்வோம்.

சிவபிரானின் உடுக்கையிலிருந்து வந்த ஒலியை ஆதாரமாக வைத்து அக்ஷர வடிவில் அவற்றைக் கொண்டு வந்து அவற்றை வரிசைப்படுத்தி மொழிக்கு இலக்கணம் வகுத்துத் தந்தவர் "பாணி நீ". அம் மேதை இயற்றிய "ஸித்தாந்த கௌமுதி" (பாணி நீ ஸூத்ரம்) என்ற நூல் அவருடைய ஞானத்திற்கும் மேதைக்கும் எடுத்துக் காட்டு. உண்மையில் அவரல்லவோ நமது குருநாதன்? இலக்கணப் பிழையின்றி பல நூற்கள் இயற்றுவதற்கு பாணி நீயின் மூல நூல் மிக்க உறு துணையாக இருந்ததை எண்ணிப் பார்க்கும் போது அகம் மகிழ்கின்றோம். ஆச்சரியப்படுகின்றோம்.

குற்றம் குறைவில்லாத ஒரு கலை நிகழ்ச்சியை ஒரு கலைஞன் வழியாகப் பார்க்கும் தோறும், கேட்கும்தோறும் அவரை நினைத்து அவர் தொகுத்துக் கொடுத்த அவ்வழியைப் பின்பற்றும் கலைஞன் கலையை வெளிப்படுத்தும் திறனை முதல்தர பாணி (A1 பாணி) என்று குதூகலிக்கின்றோம். எந்தக்கலையானாலும் நல்ல ஸம்பிரதாய மானவையாயிருப்பின் அந்தப் பாணியை வரவேற்று நடைமுறைக்குக் கொண்டு வந்த கலைஞரின் பெயராலேயே நிலைநிறுத்துகின்றோம்.

(உதாரணம்: தஞ்சாவூர் வைத்தியனாதய்யர் பாணி, தக்ஷிணாமூர்த்தி பிள்ளை பழநி சுப்பிரமணிபிள்ளை பாணி, பாலக்காட்டு மணி அய்யர் பாணி)

"பாணி நீ" என்ற சொல்லே மருவி "பாணி" என்று நடைமுறையில் வந்திருக்கின்றது என்பது என் கருத்து.

ஒரு பாட்டுக் கச்சேரியில் ஒரு இளம் வித்வானின் வாய்ப்பாட்டைக் கேட்கின்றோம். அதே கச்சேரியில் பங்கு கொண்ட கலைஞர்களான இளம் மிருதங்க வித்வானையும் பிடில் வித்வானையும் காண நேரிடுகின்றது. கச்சேரி முழுவதும் கேட்ட பிறகு இளம் கலைஞர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தி கச்சேரி நன்றாகயிருந்தது. நல்ல ஸம்பிரதாயம்; உயர்ந்த பாணி; எனச் சொல்லி "குருநாதன் யார்" என்று கேட்கின்றோம்.

ஒன்றிரண்டு குற்றம் குறைகளை சுட்டிக் காண்பித்து கலாகாரனிடம் எடுத்துச் சொன்னால் அதற்கு விடையாக அக்கலைஞன் "இது எங்கள் பாணி" என்று சொல்வதைக் கேட்டிருக்கின்றோம். அதாவது சுருக்கமாகச் சொன்னால்

ஸம்பிரதாயம், பந்தா, வழி, School, Style என்ற சொற்களை விட தன் குருநாத னுடன் மஹானான அந்தப் பாணிநியையும் சேர்த்து இது எங்கள் குரு பாணி என்று சொல்வது வழக்கம். எப்படியோ பாணி (நி) யை மறப்பதில்லையே அம்மட்டும் ஸந்தோஷம்.

மிருதங்க வாத்தியத்தை எடுத்துக் கொண்டோமானால், திராவிட நாடாகின்ற கேரளம், ஆந்திரம், கர்னாடகம், தமிழ்நாடு என்ற இந்நாடுகளில் மட்டும்தான் ஆதி நாட்களிலிருந்து இன்றுவரை மிருதங்க வாத்தியம் கலை நிகழ்ச்சிகளில் பெரிதும் உற்சாகத்துடன் கையாளப்பட்டு வந்திருக்கின்றது. இந்நாட்களில் பல மிருதங்க வித்வான்கள் பேரும் புகழுடன் இருந்து மிருதங்கக் கலையை வளர்த்திருக் கின்றார்கள். இன்றும் அவர்கள் இசைத் தொண்டில் குறைவில்லை. ஒவ்வொரு இசைக்கலைஞனும் தனித்தனியாக அவரவர்களுக்கென்றே, ஒரு பாணியை வரைப்படுத்திக் கொண்டு கச்சேரியில் வாசிக்கின்றார்கள். அதே சமயம் பல சீடர்களை உருவாக்கும் பணியிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இளம் கலைஞர்கள் தம்தம் குருநாதன் கற்பித்தபடி அதே பாணியில் கச்சேரியில் வாசித்து வருகின்றார்களா என்று ஒரு வினா எழும்புகின்றது. குருநாதன் கற்பித்த தையும் தான் வாசிப்பதையும் மற்ற வளரும் கலைஞர்கள் எப்படி வாசிக்கின்றனர் என்பதையும் கூர்ந்து கவனித்து பலவற்றையும் கூட்டி வாசித்து வருகின்றார்களே தவிர, தனக்கென்ற "குரு பாணியை" பின்பற்றி வாசிப்பதில்லை, என்று தீர்மானமாகச் சொல்லலாம்.

ஒரு குருவிற்கு ஏற்ற சீடன் அமைய வேண்டும். அதே போல் ஒரு மாணவனுக்கு (வித்யார்த்திக்கும்) ஒரு நல்ல குரு கிடைத்துவிட்டால் அவன் போல் பாக்கியசாலி யாருமில்லை.

குருவானவர் "தா, தீ, தொம், நம்" முதல் கற்பித்து பல பாடங்கள் சொல்லிவைத்து மோறாக்கள், கோர்வைகள் எல்லாம் கற்றுத் தருகின்றார்.

நடை பேதம், ஜதி போதம் எல்லாம் கற்றுத் தந்தாலும் பாட்டுக்குப் பாட்டு கச்சேரியில் வாசிக்கச் சொல்லி வைப்பதில்லை. ஒரு காரணத்துடன் தான் அவர் சொல்லி வைப்பதில்லை என்று எளிதில் புரிந்துகொள்ள முடிகின்றது. அது எங்ஙனம்?

குருவானவர் தான் மிருதங்கம் வாசிக்கும் கச்சேரிகளுக்கு சீடனை அழைத்துக் கொண்டு போய் எப்படி வாசிக்கவேண்டும் என்பதைக் கேட்கச் செய்கின்றார். ஒவ்வொரு இசைக்கச்சேரியிலும் தான் வாசிக்கும் பாணியைக் கேட்டே அதையே முறையாகப் பின்பற்ற வேண்டும் (Follow) தம் மாணாக்கன் என்ற நோக்கத்துடன் செயல்படுகின்றார். வர்ணங்களுக்கும், கீர்த்தனைகளுக்கும் வாசிக்கும் விதம் அப்போதைக்கப்போது வரும் மனோதர்மத்தை ஒத்து வாசிக்க நேரிடுகின்றது. கூட வரும் இளந்தளிரான இசைக்கலைஞனும் அதே பாணியை பின்பற்றுவான் என்ற ஒரே நம்பிக்கையுடன் தான் சிஷ்யனை கச்சேரிக்கு அழைத்துச் செல்கின்றாரே தவிர, வெறும் மிருதங்கத்தை தூக்கிக் கொண்டு வருவதற்காக அல்ல.

இதே காரணத்திற்காகத் தான் பாட்டிற்கும், நிரவலுக்கும், ஸ்வரம் பாடும் போதும், வாசிக்க கற்றுத்தருவது இல்லை. "கற்றலில் கேட்டல் நன்றே" என்ற சான்றோர் வாக்கிற்கு ஏற்ப, கேள்வி ஞானத்தினாலேயே சிஷ்யன் வாசித்தால் தன் பாணியை மாற்றமாட்டான் என்பது குருவின் திடமான நம்பிக்கை.

சீடனின் பாணி ஏன் மாறுபடுகின்றது! குருவை மனப்பூர்வமாக நேசித்தாலும், குருவின் பாணியை ஒட்டியே தன் கலைத்திறனை காட்ட முயற்சித்தாலும், ஓரளவு முதிர்ச்சி அடையுமுன்பாக பலவிதமான வாசிப்புகளை கேட்டு வருவதனால், சீடனாகிய மாணாக்கனுக்கு எந்தப் பாணி யாருக்கு ஒத்துவரும் என்று தீர்மானிக்க முடியாமல் திகைக்கின்றான். குருவானவர் சீடன் வாசிப்பில் முதிர்ச்சியடையும் வரை வேறு கலைஞர்களுடைய வாசிப்பைக் கேட்க அனுமதிக்கமாட்டார். நல்ல முதிர்ச்சி அடைந்த பின்பு குருவே தன் சீடனை பல கச்சேரிகளுக்கு அழைத்துக்கொண்டு போய்க் கேட்கச் செய்வார்.

கேரள பாணி, ஆந்திர பாணி, கர்னாடக பாணி என்றும் தஞ்சாவூர் பாணி, புதுக்கோட்டை பாணி என்றும் பல பாணிகளிலிருந்தாலும், மிருதங்கம் பக்கவாத்தியம் என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். பக்கவாத்தியமாக வாசித்து அனுபவம் கிடைத்த பிறகுதான் தனி ஆவர்த்தன வித்வானாக வர முடிய(ம். தனி ஆவர்த்தனம் வாசிக்கும் போது பயன்படுத்தும் சொற்களை பாட்டுக்கு வாசிப்பது முறையல்ல. கச்சேரியை களை கட்டச் செய்வதில் மிருதங்க வித்வானுக்குப் பொறுப்புண்டு. தனியாவர்த்தனத்தில் நம் மனோதர்மத்தை நம் குரு பாணியில் அமோஹமாக வாசித்து ரஸிகர்களையும் வாய்ப்பாட்டு வித்வானையும் திருப்திப்படுத்தவேண்டும். சூழ் நிலையை அனுசரித்தும் கால நேரங்களை மனதிற் கொண்டும் தகுந்தபடி வாசிக்கவேண்டியது இன்றியமையாதது.

ஒரு ஸங்கீதக் கச்சேரியில் வித்வான் நன்றாக ராகம், தானம் பாடி, பின்னர் பிடில் வித்வானும் ராகம், தானம் வாசித்து முடிக்கின்றார். வாய்ப்பாட்டு வித்வான் தான் ஏற்கனவே பயிற்சி செய்திருந்த (ஸாதகம் செய்த) பல்லவியைப் பாடுகின்றார். மிருதங்க வித்வான் இச்சமயத்தில் அதற்கு ஈடாக வாசித்துக் கொண்டே பல்லவி என்ன தாளம், எடுப்பு எங்கே, அருதி எங்கே, அருதிக்குப் பின் எடுப்பு எங்கே என்று பல அம்சங்களையும் உன்னிப்பாகக் கவனித்து உடன் வாசித்து வரவேண்டிய நிர்ப்பந்தம் உண்டு.

பல்லவியை மூன்று காலம் பாடினாலும் திச்ர கதியில் பாடினாலும் உடன் வாசிக்கத் தான் வேண்டும். பழக்கமில்லாத ஒரு பல்லவியைப் பாடினால் அதற்கும் வாசிக்க வேண்டும். கேள்வி ஞான அடிப்படையில் நாம் எப்படியோ சமாளித்து விடலாம். ஆனால் தனியாக வாசிக்கும் போது பல்லவியை த்ருகாலப்படுத்தி திச்ரமும் வாசிக்கவேணுமானால் கொஞ்சம் யோசிக்கத் தான் வேண்டும். அதற்கு ஓர் உதாரணம் பார்ப்போம்.

1. பல்லவி : ஒரே தாள ஆவர்த்தத்திலேயே முடியக்கூடியதாய(ம் அல்லது 2 அல்லது 4 தாள ஆவர்த்தத்தில் முடிகின்றதாயும் அல்லது நடை பல்லவியாகவும் பாடுவதுண்டு.

மிருதங்க வித்வான் பல்லவியின் ஸாஹித்யத்தை ஞாபகம் வைத்துக் கொண்டு வாசிப்பதானது (தனியில்) தனிச் சிறப்புதான்.

தத்தகாரம் தானாக பழக்கத்தில் அமைந்து விடும். ஸாஹித்யம் ஞாபகம் இல்லையானால் என் செய்வது? இரண்டு வித பாணிகளுண்டு என்பதை நினைவில் வைத்துக் கொண்டு ஏதாவது ஒரு பாணியைப் பின்பற்றலாம்.

கண்ட ஜாதி த்ருபுட தாளம். 2 களை "ஸத்சிதானந்த சிதானந்த மூர்தே ஆனந்த மூர்தே" என்பது பல்லவி.

| எடுப்பு | கால் இடம் | அருதிக்குப் பிறகு | ஒன்றரை தள்ளி |
|---|---|---|---|
| 1 2 | 1 2 2 | 2 1 2 2 | 2 1 2 6 |
| தாம் | தி தா தீம் | தா த தீம் தா | தீம் த தீம் தா;; |
| ஸத் | சி தா ன | ந்த – சி தா ன | ந்த – மூ – ர்தே |

| | | |
|---|---|---|
| 2 | 2 2 1 | 2 1 |
| தா | தீம் தா த | தீம் த |
| ஆ | னம் த மூ | – ர்தே |

ஸாஹித்யம் அதன் தத்தகாரம் ஞாபகமாக வாசிப்பது சாலச் சிறந்தது. இது ஒரு நல்ல பாணி. ஸம்பிரதாயம்;

**வேறு ஒரு ஸம்பிரதாயம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 2 3 | 2 | 4 | 3 | 6 |
| தகிட | தாம் | தக தகிட | தாம் | – தகதிக | தகிட | தாம் ; ; |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 2 | 1 | 1 | 1 |
| ததிம் | கிண | தோம் | ததிம் | கிண | தாம் |

இதே பல்லவியை கண்ட நடை சதுச்ர ஜம்ப தாளத்தில் அமைத்துத் தரப்பட்டிருக்கிறதை

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 2 | 2 | 2 | 1 | 2 | 2 | 2 | 1 | 2 | 5 |
| தாம் | தி | தா | தீம் | தா | த | தீம் | த | தீம் | த | தீம் | தா; |
| ஸத் | சி | தா | ன | ந் | த | சி | த்ஆ | னந் | த | மூ- | ர்தே |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 2 | 2 | 1 | 2 | 1 |
| தா | தீ | தா | த | தீம் | த |
| ஆ | ன | ந் | த | மூ | -ர்தே |

இந்த மாதிரி பல பல்லவிகளுக்கும் கூடுமானவரை குருநாதன் வாசிப்பதையும் பல தேர்ச்சி பெற்ற மிருதங்க வித்வான்கள் வாசிப்பதையும் கூர்ந்து கேட்டும் நல்ல பாணியைக் கையாண்டு தனக்கென்று ஒரு பாணியும் நல்லனுபவமும் முதிர்ச்சியும் வரப்பெற்று ஒரு மிருதங்க மேதையாக விளங்க முயற்சி செய்ய வேண்டுமென்று எல்லா வித்யார்த்திகளையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இது தான் என் பாணி, நான் கற்றுக் கொண்ட பாணி! என் குருநாதன் பாணி!.